Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Abdul Rahman's *Neyar Viruppam* in Feminist Perspective

**Dr. V. Cellakani**, Assistant Professor of Tamil, Sri Sharda Women's College,
Tirunelveli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-7482-5943
DOI: 10.5281/zenodo.6620912

## Abstract

*Society is where men and women are seen together. In this present Tamil society, male dominance is seen and female suppression, oppression and maltreatment are seen. During the Sangam period, women excelled in all fields. The article is set to explore how the poet Abdul Rahman's 'Neyar Viruppam' (Interest of the Audience) depicts the living conditions of women in Tamil society amidst untold plights.*

**Keywords:** Feminism, Abdul Rahman, *Neyar Viruppam*.

## References

[1] Nowsath Ali. L. En *Manasukul Eppadi Vanthai*. Manimekalai Prasuram, Chennai-600017, 2009.
[2] Prathap. *Kavithai Sirakukal*. Master Pathipakam, Madurai -16, 2004.
[3] Prabahar. M.D. En Ithayaj; *Thudippu*. Mukil Pathipagam, Chennai – 600 039, 1998.
[4] Puthiavan. *Siraku Mulaitha Viralkal*. National Publications, Chennai – 17, 2011.
[5] Muruganatham K.K. *Sigarathai Thoda Sirakai Viri*. Sakthi Publishing House, Chennai – 600 021, 2012.
[6] Mythili Ranganathan. *Manithaneyame Marupiravi Eddu*.Manimekalai Prasuram, Chennai – 600 017.
[7] Rengammal R/Vasugi S. Penniam Anugumuraikalum. Illakia Payanpadum, Arivu Pathipagam Chennai -600 014, 2005.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பெண்ணிய நோக்கில் அப்துல் ரகுமானின் *நேயர் விருப்பம்*

**முனைவர் வே.செல்லக்கனி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-7482-5943
DOI: 10.5281/zenodo.6620912

**ஆய்வுச்சுருக்கம்**

*ஆண், பெண் என்ற இருபாலரும் சேர்ந்து காணப்படுவதே சமுதாயம். இச்சமுதாயத்தில் ஆண் அதிகாரம் மிக்கவனாகவும், பெண் அடிமைப் பட்டும் காணப்படுகின்றாள். சங்க காலத்தில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினர். கவிஞர் அப்துல் ரகுமானின் நேயர் விருப்பம், பெண்களின் வாழ்வியல் நிலையினை எவ்வாறு சித்தரிக்கின்றது என்பதை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்**: பெண்ணியம், அப்துல்ரகுமான், *நேயர் விருப்பம்.*

**முன்னுரை**

இடைக்காலத்தில் ஆண் மக்களால் அடிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு உரிய உரிமைகள், கல்வி முதலியன மறுக்கப்பட்டன. பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதனை, அக்கால இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. காலம் மாற பெண்களின் நிலையும் மாறத் தொடங்கின. தற்காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

**பெண்ணியம்**

ஆங்கிலத்திலுள்ள 'Feminism' என்ற சொல் பெண்கள் பற்றிய அறிவுத் துறை சார்ந்த சமூக வஞ்ஞானமாகும். இச்சொல் தமிழில் 'பெண்ணியம்' என்று வழங்கப்படுகிறது. 'Feminism" என்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்ற இலத்தீன் மொழிச் சொல்லின் திரிபு ஆகும். பெண்ணியம் என்பது பெண்கள் அனுபவிக்கும் எல்லாவித அடக்குமுறைகளையும் எதிர்ப்பது மட்டுமின்றிப் பெண்களின் மேம்பாட்டுக்குரிய வழி முறைகளையும் காட்டுதலாகும். பெண்ணியம் என்பது அனைத்து வகைப் பெண்களுக்கும் உரிமை வேண்டுவது. பெண்கள் தாம் மேற்கொள்ளும் அனைத்து வகை வாழ்க்கை முறைகளுக்கும் பணிகள் அனைத்திற்கும் உரிமையுடையவர்களாக இருத்தல் வேண்டும். பெண்ணியம் ஆணை எதிர்த்துக் கலகக் குரல் எழுப்புவதன்று. ஆணாதிக்கத்தை எதிர்ப்பதே ஆகும். அடிமைப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு, விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவானதே பெண்ணியம் ஆகும்.

**அறிஞர்கள் கூற்று**

- **கார்டன்** - "பெண்ணியம் தாழ்நிலையை ஆராய்ந்து அவை மாற்றிட மேற்கொள்ளப்படும் வழி முறைகளே பெண்ணியம்"
- **ஜெயின்** - "பெண்கள் ஒருவரோடு ஒருவர் சேர்த்து ஒரு ஆற்றலை உருவாக்கி அவ்வாற்றலால் விளையும் பெண்மையானது ஆண்களோடு மாறுபட்டு இருந்தாலும், அது ஆண்மைக்கு நிகரானது என ஏற்றுக்கொள்ளச் செய்வது பெண்ணியம் ஆகும்"

- **புட்சர்** - "பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதார துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே" (இரா.ரெங்கம்மாள், சி.வாசுகி, பெண்ணியம், அணுகுமுறைகளும் இலக்கியப்பயன்பாடும் - ப.9)
- **கமலாபாசின் நிசாத்செய்துகான்** - "குடும்பத்திலும் வேலை செய்யுமிடத்திலும் பெண்கள் தாழ்த்தப்படுவதும் சுரண்டப்படுவதுமாக உள்ளனர். இவற்றை பற்றிய உணர்வும், இச்சூழலை மாற்ற வேண்டி பெண்களும் ஆண்களும் எடுக்கும் எல்லா உணர்வுநிலையுடைய செயல்பாடுகளுமே பெண்ணியம் ஆகும்" (மேலது ப. 144)
- **பார்பரா ஸ்மித்** - "எல்லாத் தரப்பு பெண்களுக்கும் உரிமை பெற்றுத் தருவதே பெண்ணியம்"
- **சார்லட் பஞ்ச்** - "பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்" (மேலது ப. 10)

**பெண்மை போற்றப்படல்**

இயற்கையின் படைப்பில் பெண் பிறவியானது தனிச்சிறப்புக்குரியது. பெண்மை என்பது எல்லோராலும் விரும்பத்தக்க ஓர் அமைதியான தன்மையென்று கூறுகின்றனர். பெண்மையின் வளர்ச்சியினால் இவ்வுலகம் விரிவடைகிறது. நாட்டின் வளர்ச்சிக்கும், வீட்டின் வளத்திற்கும் பெண்களின் உழைப்பு அவசியமானதாக கருதப்படுகின்றது. சமுதாய அமைப்பு அனைத்திலும் இணைந்திருப்பது பெண்மை ஆகும்.

உழைப்பின் மேன்மையினை உணர்த்துமிடத்து, கவிஞர் அப்துல் ரகுமான்,

**நீர் பூக்கும் தாமரையில்**
**திருமகளைத் தேடாதே!**
**வியர்வை நீர் சுரக்கும் கைத்**
**தாமரையே அவள் வீடு (நே.வி.ப. 41)**

என்றும்

**வியர்வைத் துளிகளைப்**
**பரிசமாய்த் தருவோர்க்கே**
**மண்மகள் மனையாவாள் (நே.வி.ப. 65)**

என்றும் கவிதை புனைந்துள்ளார். தெய்வமாக, திருமகள் என்ற பெண் தெய்வத்தை போற்றுமிடத்தும் பெண்ணாக மண்மகளைப் பேசும் இடத்தும் ஆசிரியர் பெண்மைக்குச் சிறப்பிடம் தருகின்றார்.

கவிஞர் அப்துல் ரகுமான் மண்ணைப் பெண்ணாகப் பார்க்கின்றார்.

**உயிர்களின் கருப்பை தான்**
**சமாதியும் தானே!**
**புற்கள் என் புளகம்**
**பூக்கம் என் கனவுகள்**
**குறிஞ்சி என் கொங்கை**
**முல்லை என் கூந்தல்**
**மருதம் என் மணிக்கரம்**
**நெய்தல் என் சேலை**

**பாலை, என்**

**வேனிற்கால வியாதி!**

**வசந்தத்தில்**

**நான் பூப்படைகிறேன்**

**கார்காலத்தில்**

**கலவி செய்கிறேன்**

**இலையுதிர் காலத்தில்**

**விரதமிருக்கிறேன்**

**உங்கள் தாய்**

**பத்துமாதம் தான்**

**உங்களைச் சுமக்கின்றாள்;**

**நானோ**

**ஆயுள் முழுதும் சுமக்கிறேன் (நே.வி.ப. 12)**

இங்கே கருப்பை, புளகம். கனவுகள், கொங்கை, கூந்தல், கரம், சேலை, வியாதி, பூப்படைதல், கலவி செய்தல், வீரதமிருத்தல். தாய்மை முதலிய பெண்ணுக்குரிய தன்மைகளை மண்ணுக்கும் பொருத்துகின்றார். முடிவில், உங்கள் தாய் பத்து மாதம் தான் உங்களைச் சுமக்கிறாள் நானோ ஆயுள் முழுதும் சுமக்கிறேன் என்று சொல்லி பெண்ணை விட மண்ணை உயர்வுபடுத்துகிறார்.

**பெண்களுக்குப்**

**பொறுமைக் குணம் வந்தது**

**மசக்கை நேரத்தில்**

**என்னைத் தின்றதர்தான் (நே.வி.ப. 15)**

என்று பெண்களின் பொறுமைக் குணத்திற்கு புதுக்காரணம் ஒன்றைக் கற்பிக்கின்றார். முடிவில்,

**நீங்களும் நானும் வேறல்ல**

**காலக் குயவன்**

**என்னைப் பிசைந்து**

**பரிணாம சக்கரத்தில் வனைந்த**

**பாத்திரங்கள் தாம் நீங்கள்! (நே.வி.ப. 15)**

என்று கூறி பெண்ணையும், மண்ணையும் ஒன்று எனச் சொல்லி உயர்வுபடுத்துகின்றார்.

அடுத்து, குளத்தையும் பெண்ணாகக் காட்டி, பெண்ணைப் பெருமைப்படுத்துகின்றார்.

**வாசம் செய்கின்ற**

**மலர்சூடிப் புக்ககத்தில்**

**வாசம் செய்கின்ற குல**

**மங்கை நான், கெட்டசக**

**வாசம் எனக்கில்லை**

**என் குடும்ப வரிசையிலே**

**பாசம் மிகுந்தவள் நான்**

**பார்த்தாலே தெரியவில்லை (நே.வி.ப. 21)**

குளத்தினைப் பெண்ணாகக் காட்டிய கவிஞர், குல மங்கை, வாசம் மிகுந்த மலரினைச் சூடுபவள், பாசம் மிகுந்தவள் என்று பெண்ணின் குணங்களைப் பாராட்டியதோடு,

**தண்ணீர்க் குடும்பம்**
**தனக்குள் நான் ஒருத்தி தான்**
**பெண்ணீர்மை கொண்டவள்!**
**பிறகென்ன? பெண்ணென்றால்**
**பூப்படைய வேண்டாமா?**
**பூமியிலே என்னைப் போல்**
**பூப்படைந்து பொலிவடைந்த**
**புனலுண்டா எங்கேனும்? (நே.வி.ப. 21)**

என்று கூறி, குளமகள் பெண்ணீர்மையோடு பூப்படைந்து பொலிவடைந்த செய்தினையும் சுட்டிக் காட்டுகின்றார்.

குளத்தில் மலரும் மலர்களைப் பூப்படைதலுக்கு அடையாளமாகக் காட்டிய கவிஞர், அக்குளத்தில் மலரும் தாமரையும், தாமரையைப் போன்று சூரியனைப் பார்த்து, முகம் மலரும் சூரிய காந்தியையும் குலப்பெண்களாகச் சுட்டுகின்றார்.

**உன்னைப் பார்த்து**
**முகம் மலரும்**
**இந்தக்**
**குலப்பெண்களுக்கு**
**சூரியனே!**
**குங்குமத்தையும்**
**மஞ்சளையும்**
**பாகம் பிரித்துக்**
**கொடுத்தாயோ? (நே.வி.ப. 85)**

தாமரையும், சூரியகாந்தியையும் குலப்பெண்களாக வர்ணித்த ஆசிரியர், குலப்பெண்களுக்கே உரிய மங்கல அடையாளமாகிய குங்குமம், மஞ்சள் இரண்டினையும் அம்மலர்களின் நிறங்களின் மேலேற்றிக் கூறி பெருமைப்படுத்துகிறார். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் ஆகிய மூன்று பால்களினைத் தருகின்ற திருக்குறளினை, “மும்முலைத்தாய்” (நே.வி.ப. 92) என்று கவிஞர் கூறியிருப்பது, பொருள் பொதிந்த கற்பனையின் உச்சம்.

**மின்மினிப் பூச்சிகளைக் கூட,**
**“சிறகுத் தாரகை” (நே.வி.ப.93)**

என்று பெண்ணாகவே பார்க்கின்றார். மொத்தத்தில் வளம்கொடுக்கும், நலம் கொடுக்கும் வனப்புகள், அத்தனையும் ஆசிரியர் பெண்ணாகவே பார்க்கின்றார். இது பெண்மைக்கு கவிஞர் சூட்டுகின்ற மகுடம்.

**பெண்மையில் தாய்மை**

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற படிநிலைகளுள் மாதாவை முதற்கண் சொல்லி இருப்பதைக் கொண்டே நாம் தாய்மையின் உன்னதத்தினை உணர்ந்து கொள்ளலாம். அன்புக்கு எடுத்துக்காட்டாகத் ;தாயன்பைக் கொள்ளலாம். ஒரு தாய் குழந்தையைப் பத்து மாதம் சுமக்கின்றாள். பிரசவத்தின் போது

தான் அனுபவித்த வேதனைகள் அனைத்தையும் மறந்து, அக்குழந்தையை வாரி அணைத்துக் கொள்கிறாள். பெண்ணானவள், தாய்மை அடைதலைப் புனிதமாகக் கருதுகின்றாள். தாய்மை நிலை, ஒரு முழுமை நிலை ஆகும். தாய்மையில் தான் பெண்மை நிறைவடைகிறது. பெண்களிடையே தாய்மை குணம் நிறைந்து காணப்படுகின்றது. பூமியைப் பெண்ணாக உருவகித்த ஆசிரியர்,

**உடலெல்லாம் மார்பகமாய்**
**ஊட்டுகின்ற பூமித்தாய்**
**அழைக்கின்றாள் வாருங்கள்**
**எல்லோரும் சேர்ந்துழைப்போம்**
**ஏழ்மைக்கு விடைக்கொடுப்போம் (நே.வி.ப. 51)**

என்று பூமியின் பெண்மையில் கூடத் தாய்மையைக் காண்கிறார். சுதந்திர தினத்தைச் சுட்டுகின்ற போது,

**இந்தநாள்**
**ஓர் அதிசய நாள்**
**பிள்ளைகள் கூடி**
**ஒரு தாயைப் பெற்ற நாள் (நே.வி.ப. 51)**

என்று கூறி தாய்மையைப் போற்றுகின்றார்.

**பெண்மையின் மேன்மை**

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்பது சான்றோர்களின் அனுபவ வாக்கு. இவ்வாக்கினை மெய்ப்பிக்கும் வண்ணம் ஆசிரியர் நமது தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் மனைவியார் கஸ்தூரி பாய் அவர்களைச் சான்றாகக் காட்டுகின்றார்.

**குறுகாத குளிர்நிலவே! உன் மணாளர்**
**கொதித்தெழுந்து புரட்சித்தீ ஆனபோது**
**விறகானாய்! தண்ணீராய் இருந்ததில்லை;**
**விடுதலைவான் வெளியிலவர் பறந்தபோது**
**சிறகானாய்! சிறைக்கூண்டாய் இருந்ததில்லை;**
**சீர்திருத்த எழுத்துக்கள் எழுதும்போதோ**
**இறகானாய், கைவிலங்காய் இருந்ததில்லை**
**இலக்கணத்தை உண்டாக்கும் இலக்கியம் நீ! (நே.வி.ப.43)**

குளித்த நிலவாக கஸ்தூரிபாயை உருவகித்த ஆசிரியர், அவர் காந்தியடிகளின் நாட்டு விடுதலைக்கான ஒவ்வொரு முயற்சியிலும் தூண்டுகோலாகவும்,துணையாகவும் இருந்ததை எண்ணி வியக்கின்றார். இலக்கணத்தை உருவாக்கும் இலக்கியம் நீ என்று அவரைப் போற்றுகின்றார். இலக்கியங்களுக்கு எழுதப்படுவதுதான் இலக்கணம். இதனை உணர்ந்த ஆசிரியர், தேசப்பிதா என்ற ஒப்பற்ற இலக்கணமாக, காந்தியடிகள் உயர்வதற்குக் காரணம், அவரது மனைவியரின் ஆக்கப்பூர்வமான செயல்களே என்று விளக்கமளிக்கின்றார்.

பெண்களே உங்களால் தான் எங்களுக்கு இரவும் பகலும், வாழ்வும், மரணமும் என்று ஆண்கள் சார்பாகப் பேசுகின்றார். ஆண்கள் வாழ்வில் இரவோ, பகலோ, வாழ்வோ, மரணமோ அனைத்திற்கும் பெண்களே காரணம் என்கின்றார்.

**காதல் சிறப்பு**

காதல் என்பது நான்கு விழிகளில் சந்திப்பில் இரு இதயங்கள் மோதிக் கொள்ளும் விபத்து, இதனை, கவிக்கோ அப்துல்ரகுமான்,

**"அவன் அவளுக்குள்**
**ஒளித்து கொண்டான் - அவள்**
**அவனுக்குள் ஒளிந்து கொண்டால்! (நே.வி.ப. 89)**

என்று கூறுகின்றார். என் கண்ணுள் காதலர் இருக்கிறார். ஆகவே சிறிது மறைவார் என்றஞ்சி மையும் தீட்டுவதில்லை என்பதனை,"...... எழுதேசம் கரப்பாக்கு அறிந்து" (திருக்குறள், கு.எ. 112) என்று வள்ளுவர் கூறுகின்றார். வள்ளுவரைப் பின்பற்றி ஆசிரியர் அப்துல்ரகுமானும் 'கண்ணும் எழுதேம்' என்ற தலைப்பிலேயே ஒரு கவிதையைத் தீட்டியுள்ளார்.

**கண்ணில் ஏன்**
**மை தீட்டவில்லை?**
**என்கிறாயா தோழி**
**...காதலர்**
**கோல்பட்டால் வலிக்காதா?**
**அவரை வைத்த இடத்தில்**
**வேறொன்றை வைப்பது**
**கற்புக்கு இழுக்கல்லவா? (நே.வி.ப.82)**

மை தீட்டினால், கண்ணுள் இருக்கும் காதலர் மறைந்து விடுவார் என வள்ளுவரின் தலைவி ஒரே ஒரு காரணம் கூற, அப்துல் ரகுமானின் கவிதைத் தலைவியோ, காதலர் முகத்தில் மை என்ற கரியைப் பூசலாமா? அவர் சூரியன் அவர் மீது இருட்டைத் தடவலாமா? நெஞ்சம் எனும் வீட்டில் அவரிருக்க, கண்ணாகிய வாசலில் வரவேற்புக் கோலம் எதற்கு? அவரையே தீட்டி அழுகுபெற்ற கண்களுக்கு மையலங்காரம் தேவையா? கண்ணைவிட என் காதலர் மென்மையானவர், மை தீட்டும் கோல்பட்டால் வலிக்காதா? என்று பல காரணங்களை வினாக்கோலத்தில் கூறுகிறார். அனைத்திற்கும் உச்சமாக முடிவில் அவரை வைத்த இடத்தில் வேறொன்றை வைப்பது கற்புக்கு இழுக்கல்லவா? என்று கேட்டு கற்பு நலனுரைப்பது, தலைவியின் காதலுக்கு சிறப்பு சேர்ப்பதாக அமைந்துள்ளது. 'யாரவள் கனவில் வருகின்றாள்' என்ற தலைப்பில் இடம் பெறுகின்ற இன்னொரு கவிதையும் காதல் சிறப்பினைக் கவிதையாக மொழிகின்றது.

**முதிர்கன்னியின் ஏக்கம்**

திருமண வயதை அடைந்தும் திருமணம் ஆகாமல் இருக்கும் பெண்களை முதிர்கன்னிகள் என்பர். இப்பெண்களின் நிலைக்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் 'வறுமையின் வாட்டலா, பெண்ணின் நிறமா, அழகின்மையா, படிப்பின்மையா' என்று பல கேள்விகள் எழும்புகின்றன. இப்பெண்கள் தங்களின் ஏக்கங்களை மாற்றவும் முடியாமல், வெளிப்படுத்தவும் முடியாமல், கடுந்துயர் அடைகின்றனர். அவர்கள் அழுததால் அவர்களின் கண்ணீர் மட்டுமின்றி, அவர்களுடைய இளமையும் கரைந்தது. முதிர்கன்னியின் இவ்அவலநிலையினை,

**ஆண்டு பல போனதம்மா மூலையில் நான் குந்தி**
**அழுதழுது சிவந்ததம்மா விழிகள் நீரைச் சிந்தி**

**வருடம் பல போனதனால் வந்ததம்மா முதுமை**

**வாசமெல்லாம் போன நாங்கள் வனப்பழிந்த பதுமை**

**ஒருபொழுதும் வருவதில்லை உள்ளமதில் இனிமை**

**ஒளியிழந்த வாழ்க்கையிலே இருப்பதெலலாம் தனிமை (பிரதாப், கவிதைச்சிறகுகள் - ப.138)**

என்று 'பிரதாப்' என்பவர் தன் கவிதை நூலில் கூறுகின்றார்.

முதிர்கன்னியர், தங்களை இடித்துக்குறை சொல்வதற்கு ஆட்கள் இருப்பதாகவும், தன்னை மணந்து கொள்ள எவரும் இல்லை என்பதாகவும் தங்கள் குறைகளை முறையிடுவதாக லி.நௌஷாத் அலி கவிதை புனைந்துள்ளார்.

**நாங்களும்**

**பாபர்மசூதியும் ஒன்று**

**இடிக்க ஆளுண்டு**

**கட்ட ஆளில்லை (லி.நௌஷாத்அலி, என் மனசுக்குள் எப்படி வந்தாய்? – ப.40)**

வாசலில் வைக்கப்பட்ட புள்ளிகளானது, கோலமிட வருபவர்களை எதிர்நோக்கி காத்து கொண்டிருப்பது போல, இவர்களும் மாலையிட வரும் மணாளர்களை எண்ணி ஏக்கத்துடன் காத்து இருக்கின்றனர் என்பதனை,

**புள்ளிகள் மட்டும்**

**வாசலில்**

**ஏக்கத்துடன் கோலமிட**

**வருபவர் எவரோ (க.கி.முருகானந்தம், சிகரத்தைத் தொட சிறகை விரி – ப.37)**

என்று க.கி.முருகானந்தம் தன் கவிதை நூலில் கூறுகிறார். தங்களை மணம் முடிப்பதற்கு இராமன் வருவான் என்று, முதிர்கன்னியர் எதிர்பாத்து வருடங்கள் பல போயின. ஆனால், இராமனைப் போல அல்லது இராவணனைப் போன்றவர்கள் கூட மணமுடிக்க வரவில்லை என்று ஏக்கத்தோடு ஏம்பல் ராஜா கவிதை புனைந்துள்ளார்.

**இராமன் வருவானென்று**

**இராமன் வருவானென்று**

**எத்தனை நாள்தான் காத்திருப்பது**

**கடைசியில் ஒரு**

**இராவணன் கூட வரவில்லையே**

**இந்த சீதைகளை சிறையெடுக்க (ஏம்பல் ராஜா, அக்னிக்குஞ்சுகள் - ப.6)**

முதிர்கன்னிகள் வெட்கப்பட்டு வெட்கப்பட்டு, வெட்கத்திற்கு வெட்கம் வந்து விடும். அவ்வெட்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க, எவரேனும் வரமாட்டார்களா என்று ஏக்கத்துடன் வருந்துபவர்களாக முதிர்கன்னியர் காணப்படுகின்றனர். இதனை,

**வெட்கப்பட்டு**

**வெட்கப்பட்டு**

**வெட்கத்திற்கே**

**வெட்கம்**

**வந்து விட்டது**

**எவனாவது ஒருவன்**
**முற்றுப்புள்ளி**
**வைக்கமாட்டானா**
**அவள்**
**வெட்கத்திற்கு (மு.துர்காதேவி, இமைமூடி ஒரு நொடி – ப. 63)**

என்று ‘மு.துர்காதேவி’ தன் கவிதை நூலில் கூறுகின்றார். முதிர்கன்னியரான இவர்களது ஏக்கத்தையும் ஆசைகளையும் நாட்காட்டி, தாள்களை கிழித்து வீசுவது போன்று கிழித்து வீசுகின்றது. அவ்வாறு வீசும்போது, பறப்பது தாள்கள் மட்டுமின்றி அவர்களுடைய திருமண ஆசைகளும் தான். முதிர்கன்னி ஒருத்தி, தன் மனதில் உள்ள ஏக்கத்தைக் கூறுவதாக அமைந்துள்ள ஒரு கவிதையினை,

**மாலை தொடுத்து வைத்தேன் - அதில் ஏக்க**
**மனமும் எடுத்து வைத்தேன்**
**மலர்வாடும் முன்னே வராவிடினும் - என்**
**மனம் வாடும் முன்னே வருவாயா?**
**சாபத்தைப் போலத்**
**தழுவும் இருட்டிலோர்**
**தீபத்தை ஏற்றி வைத்தேன் - புலம்பும் என்**
**தாபத்தைத் தேற்றி வைத்தேன்**
**ஒளியணையா முன் வராவிடினும் - என்**
**உயிரணையா முன் வருவாயோ? (நே.வி.ப.80)**

என்று ‘கவிக்கோ அப்துல்ரகுமான்’ தனது ‘நேயர் விருப்பத்தில்’ கூறுகின்றார். முதிர்கன்னியானவள், தன் மனதில் உள்ள துன்பங்களையெல்லாம் எண்ணி கண்ணீர் சிந்துவதாகவும், தங்களது உள்ளத்தில் இனிமை என்பது ஒருநாளும் இல்லை என அழுது புலம்புவதாகவும் கவிதை புனைந்துள்ளார் ஆசிரியர்.

**விதவைகளின் அவலநிலை**

கணவனை இழந்தபெண்களை விதவை என்பர். கணவனை இழந்த பெண் சிறுவயதினளாக இருந்துவிட்டாலோ அவளது வாழ்க்கையே கேள்வி குறியாகி விடுகிறது. விதவைப் பெண் எதிரில் வந்தால் சகுனம், சம்பிரதாயம் என்று அப்பெண்களை சமூகத்தினர் மன வேதனைக்கு உட்படுத்;துகின்றனர். சமூகத்தில் அப்பெண்களுக்கென சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. அக்கட்டுப்பாடுகளுள் ஒன்றுதான் வெள்ளாடை தரிக்கச் செய்தல் என்பது. விதவைகள் வெள்ளாடை தரிக்கும் போது அதனுள் மறைக்கப்படுவது அவளது உடல் மட்டுமின்றி உள்ளத்து உணர்வுகளும்தான்.

**முடிவுரை**

காணும் பொருள்களில் எல்லாம் பெண்மையைக் கண்ட ஆசிரியர், அப்பெண்மையைப் போற்றுவதோடு நின்றுவிடாமல் காதல் சிறப்பு, முதிர்கன்னியர் ஏக்கம், விதவையர் அவலநிலை, ஆணாதிக்கம், இலக்கியங்களில் பெண்கள் என பெண்மை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளையெல்லாம் விளக்கி, போற்றும் இடங்களில் போற்றியும், தூற்றும் இடங்களில் தூற்றியும் கவிதை புனைந்துள்ளார். மிகுதியான கவிதைகள் உருவகக் கவிதைகளாக அமைந்திருப்பது இந்நூலின் சிறப்பு.

**துணைநூற்பட்டியல்**

[1] நௌஷாத் அலி.லி. *என் மனசுக்குள் எப்படி வந்தாய்*. மணிமேகலைப் பிரசுரம், சென்னை – 600 017, 2009.

[2] பிரதாப். *கவிதைச் சிறகுகள்*. மாஸ்டர் பதிப்பகம், மதுரை – 16, 2004.

[3] பிரபாகரன் மு.தா. *என் இதயத் துடிப்பு*. முகில் பதிப்பகம், சென்னை – 600 039, 1998.

[4] புதியவன். *சிறகு முளைத்த விரல்கள்*. நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை – 600 017, 2011.

[5] முருகானந்தம் க.கி. *சிகரத்தைத் தொட சிறகை விரி*. சக்தி பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை – 600 021, 2012.

[6] மைதிலி ரங்கநாதன். *மனிதநேயமே மறுபிறவி எடு*. மணிமேகலைப் பிரசுரம், சென்னை – 600 017.

[7] ரெங்கம்மாள். இரா. வாசுகி.சி *பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்*. அறிவுப் பதிப்பகம், சென்னை – 600 014, 2005.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.